ந.க.எம்1/15109/2018,
நாள்: 30 -06-2018

மாவட்ட தேர்தல் அலுவலர்,
மற்றும் மாவட்டஆட்சியர் அலுவலகம்,
கடலூர்.

## பத்திரிக்கைச் செய்தி

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளின் படி கடலூர் மாவட்டத்தில் உள்ள 9 சட்டமன்ற தொகுதிகளின் வாக்குச் சாவடிகளில் உள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை (ஊரக பகுதியில் 1200 / நகரப்பகுதியில் 1400) கருத்தில் கொண்டு வாக்குச் சாவடிகளை பிரித்தல் /வாக்குச் சாவடி மையங்கள் வாக்காளர்கள் குடியிருப்பு பகுதியில் இருந்து 2 கி.மீ தூரத்திற்கு மேல் உள்ளவை / பழுதடைந்த கட்டிடங்களில் உள்ள வாக்குச் சாவடி மையங்களை வேறு கட்டிடத்திற்கு மாற்றம் செய்தல் மற்றும் இதர காரணங்களுக்காக வாக்குச் சாவடி மையங்களை பகுப்பது (Rationalization) தொடர்பான பணிகள் கடந்த 21/06/2018 முதல் நடைபெற்று வருகிறது. இதன் இறுதி கட்டமாக 02/07/2018 அன்று வாக்குச் சாவடிகளின் பட்டியல் வெளியிடப்பட உள்ளது. மேற்படி வாக்குச் சாவடி மையங்கள் குறித்த பட்டியல் பொது மக்களின் பார்வைக்காக மாவட்ட தேர்தல் அலுவலர் அலுவலகத்தில், சம்மந்தப்பட்ட வாக்காளர் பதிவு அலுவலர் / உதவி வாக்காளர் பதிவு அலுவலர் அலுவலகங்களில் வைக்கப்பட உள்ளது. இவ்வரைவு அறிக்கை தொடர்பாக பொதுமக்கள் தங்களது கூற்று மற்றும் ஆட்சேபணைகள் ஏதேனும் இருப்பின் 09/07/2018-க்குள் எழுத்து மூலமாக சம்மந்தப்பட்ட வாக்காளர் பதிவு அலுவலர்/ உதவி வாக்காளர் பதிவு அலுவலர் அல்லது மாவட்ட தேர்தல் அலுவலர் அலுவலகத்தில் தெரிவிக்கலாம். மேலும் பொது மக்கள் வரைவு அறிக்கையினை பின்வரும் கடலூர் மாவட்ட அரசு வலைதள(**www.cuddalore.nic .in**) தொடர்பில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

**ஒம்/-வே.ப.தண்டபாணி**
மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும்
மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர்.

//உ.ந.உப//

30/6/18

மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும்
மாவட்ட ஆட்சித் தலைவருக்காக, கடலூர்.

30/6/18

பெறுநர்

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
கடலூர்.

--- கடலூர் மாவட்டத்தில் வெளியாகும் அனைத்து நாளிதழ்களிலும் இச்செய்தியினை பிரசுரம் செய்திட தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.